**பிரசார் பாரதி**
**அகில இந்திய வானொலி - சென்னை - 4**
**12 10 2025 SUNDAY - 6 45 AM**
**வணக்கம்-மாநில செய்திகள்**

**தலைப்புச் செய்திகள்**

- இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், ஜனநாயகத்தின் ஆன்மாவாக திகழ்கிறது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்.
- புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது.
- தமிழர்களின் தொன்மையான கலைகளை பாதுகாப்பதில் மாநில அரசு அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.
- அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.
- உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

இந்திய அரசியல் அமைப்புச் சட்டம், ஜனநாயகத்தின் ஆன்மாவாக திகழ்கிறது என்று மக்களவைத் தலைவர் திரு. ஓம் பிர்லா தெரிவித்துள்ளார்

பார்படாஸில் நடைபெற்ற காமன்வெல்த் நாடாளுமன்ற தலைவர்கள் மாநாட்டில் உரையாற்றிய அவர், ஜனநாயகம் மற்றும் சமத்துவத்தில் இந்தியா உலகிற்கு முன்மாதிரியாக உள்ளதாக கூறினார்.

பருவநிலை மாற்றம், தொற்றுநோய் உள்ளிட்ட நெருக்கடிகளுக்கு அனைத்து நாடுகளும் இணைந்து தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை அவர் வலியுறுத்தினார்.

ஊட்டச்சத்து பாதுகாப்பில் இந்தியாவின் பங்களிப்பை அவர் எடுத்துரைத்தார்.

சர்வதேச சூரியசக்தி கூட்டமைப்பு, பேரிடர்களை எதிர்கொள்ளும் வகையில், உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளில் இந்தியா இணைந்து செயல்பட்டு வருவதாக திரு. ஓம் பிர்லா தெரிவித்தார்.

>>>>>><<<<<<

புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக மத்திய இணையமைச்சர் திரு. கீர்த்தி வர்தன் சிங் தெரிவித்துள்ளார்.

அபுதாபியில் நடைபெற்ற இயற்கை பாதுகாப்பு குறித்த சர்வதேச மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், இயற்கைக்கு உகந்த வாழ்க்கை முறை குறித்து எடுத்துரைத்தார்.

சுற்றுச் சூழலை பாதுகாக்கும் வகையில், ஒருங்கிணைந்த திட்டமிடல் இன்றியமையாதது என்று அவர் குறிப்பிட்டார்.

அதிகரித்து வரும் நகரமயமாக்கல் காரணமாக, பசுமை நகரங்கள் உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை திரு. கீர்த்தி வர்தன் சிங் வலியுறுத்தியுள்ளார்.

>>>>>><<<<<<

தமிழர்களின் தொன்மையான கலைகளை பாதுகாப்பதில் மாநில அரசு அக்கறையுடன் செயல்பட்டு வருவதாக முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் நடைபெற்ற விழாவில் 2021, 2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான கலைமாமணி விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

தொன்மையான கலைகளை வளர்க்கவும், கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

நாட்டுப்புறக் கலைஞர்கள் தங்களுக்கு தேவையான உபகரணங்களை வாங்குவதற்கு ஆண்டுதோறும் 500 கலைஞர்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படுவதாகவும் முதலமைச்சர் தெரிவித்தார்.

விழாவில், நாதஸ்வர ஆசிரியர் கோ. பில்லப்பன், குரலிசைக் கலைஞர் பாபநாசம் அசோக் ரமணி, பரதநாட்டிய ஆசிரியர் வழுவூர் எஸ். பழனியப்பன், இசை நாடக நடிகர் எம்.பி. விஸ்வநாதன், திரைப்படத்துறையைச் சேர்ந்த எஸ்.ஜே. சூர்யா, சாய் பல்லவி உள்ளிட்ட பல்வேறு துறையைச் சேர்ந்த கலைஞர்கள் கலைமாமணி விருதுகளை பெற்றுக் கொண்டனர்.

>>>>>><<<<<<

இயற்கை வேளாண் விளைபொருட்கள் மற்றும் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களுக்கான நிரந்தர சந்தையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. மூர்த்தி தெரிவித்துள்ளார்.

மதுரையில், இயற்கை விவசாயம் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சியை அவர் தொடங்கி வைத்துப் பேசினார்.

உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோர் இடையே நேரடி தொடர்பை ஏற்படுத்தும் நிலை உருவாக்கப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

உடல் ஆரோக்கியத்தை பாதுகாக்கும் வகையில், இயற்கையாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை மக்கள் பயன்படுத்த தொடங்கியுள்ளதாக திரு. மூர்த்தி தெரிவித்தார்.

>>>>>><<<<<<

அஇஅதிமுக ஆட்சிக்காலத்தில் செயல்படுத்தப்பட்ட திட்டங்களை திமுக அரசு கிடப்பில் போட்டுள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி குற்றம் சாட்டியுள்ளார்.

நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோட்டில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் பேசிய அவர், நீர்ப்பாசன திட்டத்திற்காக பல கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை சுட்டிக்காட்டினார்.

குடி மராமத்து திட்டத்தின் மூலம் அனைத்து ஏரிகளும் தூர்வாரப்பட்டு, விவசாயிகளுக்கு பாசன வசதி ஏற்படுத்தப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

அஇஅதிமுக ஆட்சிக் காலத்தில் 11 மருத்துவ கல்லூரிகள் உட்பட 68 கலை அறிவியல் கல்லூரிகள், 27 பாலிடெக்னிக் கல்லூரிகள், 4 பொறியியல் கல்லூரிகள் தொடங்கப்பட்டதாக திரு. எடப்பாடி பழனிசாமி கூறினார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் கோவை, திருநெல்வேலி மாவட்டங்களை ஒட்டிய மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, தென்காசி, மதுரை, திண்டுக்கல், திருச்சி, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

ஈரோடு, தேனி, திண்டுக்கல், சேலம், தூத்துக்குடி, ராமநாதபுரம், விருதுநகர் மாவட்டங்களின் ஒரு சில இடங்களில் அடுத்த 5 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, ஒகேனக்கல் காவிரியாற்றில் நீர்வரத்து அதிகரித்துள்ளதை அடுத்து, சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் மேற்கொள்ளவும், அருவிகளில் குளிக்கவும் இரண்டாவது நாளாக தடைவிதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் – தண்டபாணி 49 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

## இருவரிச் செய்திகள்

ஜப்பானில் பரவிவரும் காய்ச்சல் காரணமாக நான்காயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

கண்டம் விட்டு கண்டம் பாயும் சக்திவாய்ந்த *Hwasong-20* ரக ஏவுகணைகளை, வடகொரிய அதிபர் திரு. *Kim Jong Un* தலைமையில் நடைபெற்ற ராணுவ அணிவகுப்பில் காட்சிப்படுத்தப்பட்டது.

>>>>>><<<<<<

மெக்ஸிகோவில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவு காரணமாக 27 பேர் உயிரிழந்துள்ளனர்.

>>>>>><<<<<<

அமெரிக்காவின் மிசிசிபி மாகாணத்தில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நான்கு பேர் உயிரிழந்தனர்.

>>>>>><<<<<<

சத்தீஸ்கர் மாநிலம் தண்டேவாடா மாவட்டத்தில் சந்தேகத்திற்குரிய நக்ஸலைட்டுகள் ஆறு பேர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் சார்பில் மகளிர் சுய உதவிக் சுய உதவி குழுக்களால் தயாரிக்கப்பட்ட பொருட்களின் விற்பனை மற்றும் கண்காட்சியை ஆட்சியர் திரு. பிரதாப் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

அரியலூர் மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலை தடுக்கும் வகையில், ரயில்களில் மோப்ப நாய் உதவியுடன் காவல்துறையினர் சோதனை மேற்கொண்டனர்.

>>>>>><<<<<<

*கோவையில் இந்திய தரநிர்ணய அமைப்பின் சார்பில், தரக் கட்டுப்பாடுகளின் முக்கியத்துவம் குறித்து தொழில்துறையினருக்கு எடுத்துரைக்கப்பட்டது.*

>>>>>><<<<<<

*ராணிப்பேட்டை மாவட்டம், லாலாப்பேட்டை பகுதியில் உள்ள அரசு மருத்துவமனை பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்ற நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

>>>>>><<<<<<

*திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி ஸ்ரீநிவாச பெருமாள் கோவிலில் புரட்டாசி சனிக்கிழமையை ஒட்டி, சிறப்பு பூஜைகள் நடைபெற்றன.*

>>>>>><<<<<<

*தமிழகத்தில் முதல் முறையாக பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் சனிக்கிழமை தோறும், பழைய பொருட்கள் சேகரிக்கப்பட்டு, சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில், நவீன முறையில் அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.*

>>>>>><<<<<<

*உலகக்கோப்பை மகளிர் ஒருநாள் கிரிக்கெட் போட்டியில், இந்தியா இன்று ஆஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது.*

*விசாகப்பட்டினத்தில் நடைபெறும் இப்போட்டி பிற்பகல் 3 மணிக்குத் தொடங்குகிறது.*

>>>>>><<<<<<

*புரோ கபடி லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டங்களில் பெங்களூரு - ஜெய்ப்பூர் அணியையும், புனே – தமிழக அணியையும் வென்றன.*

*இன்று நடைபெறவுள்ள ஆட்டங்களில் தில்லி – புனே அணியையும், பெங்களூரு – பெங்கால் அணியையும் எதிர்கொள்கின்றன.*

>>>>>><<<<<<

*15 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேச டேபிள் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் Ankolika பட்டம் வென்றார்.*

***துனிஷியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், இத்தாலியின் Loth Manon-ஐ வென்றார்.***

***>>>>>><<<<<<***

***கோவையில் நடைபெற்ற முதலமைச்சர் கோப்பைக்கான கூடைப்பந்து போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் சென்னை அணி கோப்பையைக் கைப்பற்றியது.***

***>>>>>><<<<<<***